தொழில் துறை

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

மானியக் கோரிக்கை எண் - 27

அறிவிப்புகள்

2021-2022

தொழில் துறை

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

மானியக் கோரிக்கை எண் - 27

அறிவிப்புகள்
2021-2022

துரைமுருகன்

நீர்வளத்துறை அமைச்சர்

1. பயனற்ற பழைய சுரங்கம் மற்றும் குவாரிகளை பொதுமக்களுக்கு பயனுள்ள அமைப்புகளாக மாற்றுதல்

குத்தகைக் காலம் முடிவுற்று பயனற்ற நிலையில் உள்ள 436 சுரங்கங்கள் மற்றும் குவாரிகள் கண்டறியப்பட்டு ஆக்கப்பூர்வமான பயன்பாட்டிற்குக் கொண்டு வர உத்தேசிக்கப் பட்டுள்ளது. ஏற்கனவே காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள சிக்கராயபுரம் மற்றும் திருச்சி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கோ.அபிசேகபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள பயனற்றக் கல்குவாரிகளை நீர் சேகரிப்பு மையங்களாக மாற்றிப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே தற்போது கண்டறியப் பட்டுள்ள 436 பயனற்ற குவாரிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளிடமோ ஒப்படைத்து அதனை நீர் சேகரிப்பு அமைப்புகளாக மாற்றி கோடைக்காலங்களில் பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் உபயோகப்படுத்தப்படும்.

2. விதிமுறைகளுக்குப் புறம்பாக கனிமங்கள் எடுப்பதை தடுக்க ஆளில்லா சிறிய ரக விமானத்தை பயன்படுத்துதல்

சுரங்கம் மற்றும் குவாரிப்பகுதிகளில் அனுமதிக்கப்பட்ட அளவினை விட கூடுதலாகக் கனிமங்கள் எடுக்கப்படுவதால் ஏற்படும் வருவாய் இழப்பினைத் தடுக்க ஆளில்லா விமான தொழில்நுட்பம் (Drone Technology) மூலம் சுரங்கங்களை கண்காணிக்க பரிசோதனை முறையில் தொடங்கப்பட்டது. அதன் அடுத்த கட்டமாக இந்த ஆண்டு அனைத்துக் குவாரிகளையும் வருடத்தின் முதல் ஆறு மாத முடிவிலும் வருட இறுதியிலும் ஆளில்லா விமானம் (Drone) மூலம் எடுக்கப்பட்டக் கனிமங்களின் அளவினை துல்லியமாக அளவீடு செய்து அனுமதிக்கப்பட்ட கனிமத்தின் அளவுடன் ஒப்பீடு செய்த பின்பே நடைச்சீட்டு வழங்கப்படும். இத்திட்டம் ஆண்டொன்றுக்கு ரூ.25 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

3. குவாரிப்பணிகளில் இருந்து வரலாற்று சின்னங்கள், பழந்தமிழர் கல்வெட்டுகள், சமணப்படுகை மற்றும் தொல்பொருள் தளங்கள் பாதுகாக்கப்படும்

மலைகள், குன்றுகள் மற்றும் குகைகளில் உள்ள தொன்மையான கல்வெட்டுகள் மற்றும் ஓவியங்கள் போன்ற வரலாற்றுச் சின்னங்கள் தான் தமிழர்களின் தொன்மையான நாகரீக வரலாற்றினைப் பறைசாற்றும் ஆவணங்களாகத் திகழ்கின்றன. கரூர் மாவட்டம் புகளூரில் உள்ள பிராமி கல்வெட்டுகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் சித்தன்னவாசலில் உள்ள குடைவரை கோவில்கள் மற்றும் ஓவியங்கள், மதுரை மாவட்டத்தில் உள்ள சமணர் படுகைகள் இதற்கு உதாரணமாக விளங்குகின்றன. இவற்றைப் பேணிப் பாதுகாப்பது நமது தலையாய கடமையாகும்.

இத்தகைய வரலாற்றுச் சின்னங்களை பாதுகாப்பதின் மூலம் அவற்றின் தொன்மையினை வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ளவும், வரலாற்று ஆராய்ச்சிக்காகவும், அவற்றை சிதைவுகளில் இருந்து பாதுகாக்கவும், இச்சின்னங்கள் அமைந்துள்ள பகுதியிலிருந்து 500 மீட்டர் சுற்றளவிற்குள் சுரங்கப் பணிகள் நடைபெறுவதைத் தடை செய்யும் வகையில் கனிம விதிகளில் திருத்தம் செய்யப்படும்.

4. எம்.சேண்ட் (M.Sand) தயாரிப்பு தொழிலினை முறைப்படுத்த ஒரு புதிய கொள்கை உருவாக்கப்படும்

கட்டுமானப் பணிகளில் ஆற்று மணலுக்கு மாற்றாக சமீப காலமாக எம்.சேண்ட் உபயோகம் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் தரமற்ற எம்.சேண்டினை சந்தைகளில் விற்பனை செய்வதை தடுக்கவும், கண்காணித்திடவும் எம்.சேண்ட் தயாரிப்பு, தரம், விலை மற்றும் அவற்றை கொண்டு செல்லுதல் ஆகியவற்றை வரைமுறைப்படுத்த மாநில அளவில் கொள்கை ஒன்று உருவாக்கப்படும்.

5. பல ஆண்டுகளாக அப்புறப்படுத்தப்படாமல் குவாரி பகுதியிலேயே மலை போல் குவிந்து கிடக்கும் கிரானைட் கழிவு கற்களை அரசுக்கு வருவாய் ஈட்டும் வகையில் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும்

தமிழ்நாட்டில் கருப்பு மற்றும் பலவண்ண கிரானைட் குவாரிகள் அரசு புறம்போக்கு மற்றும் பட்டா நிலங்களில் இயங்கி வருகின்றன. இக்குவாரிகளிலிருந்து கற்துண்டங்கள் வெட்டி எடுக்கப்பட்டு உள்நாட்டு உபயோகம் மற்றும் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அரசுக்கு கனிம வருவாய் ஈட்டப்பட்டு வருகிறது. மீதமுள்ள கிரானைட் கழிவுகள் குவாரிப் பகுதியிலேயே மலை போல் உபயோகமின்றி குவித்து வைக்கப்பட்டுள்ளது. இக்கழிவு கற்களை எடை அடிப்படையில் உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்து விற்பனை செய்ய அனுமதிப்பதின் மூலம் அரசுக்கு கூடுதல் வருவாய் கிடைப்பதுடன், மேற்கண்ட கழிவுகள் இதர பயன்பாட்டிற்கு உபயோகிக்க வழிவகை செய்யப்படும். இதனால் சுற்றுச்சூழல் மேம்படும்.

6. அதிக செறிவூட்டப்பட்ட கிராபைட் (High grade Graphite Flakes) தயாரிக்க தொழில்நுட்ப ஆய்வு மேற்கொள்ளப்படும்

தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு சிவகங்கை மாவட்டத்தில் கிராபைட் சுரங்கமும், கிராபைட் சுத்திகரிப்பு ஆலை ஒன்றும் உள்ளது. அதன் செயல்பாடுகளை மேம்படுத்தவும் சந்தையில் புதியதாக தேவை உருவாகியுள்ள லித்தியம் அயர்ன் பாட்டரீகளுக்காக அதிக செறிவூட்டப்பட்ட கிராபைட் (High grade Graphite Flakes) தயாரிக்க தொழில்நுட்ப ஆய்வு மேற்கொள்ளப்படும்.

7. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் கிராபைட் சுரங்கம் மற்றும் ஆலையின் சுற்றுவட்டாரத்தில் அமைந்துள்ள கிராம பகுதிகளில் சுற்றுச்சூழல் மேம்படுத்தப்படும்

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் கிராபைட் சுரங்கம் மற்றும் ஆலையின் சுற்றுவட்டாரத்தில் அமைந்துள்ள கிராமங்களுக்கு சுற்றுச்சூழல் பாதிக்காத வண்ணம், சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டத்தின்படி, மரம் நட்டு பராமரித்தல், நீர்வள ஆதாரங்களை பராமரித்தல், காற்று மாசு குறைக்கும் நடவடிக்கை எடுத்தல் போன்ற பணிகள் ரூ.63 இலட்சத்தில் செய்யப்படும்.

8. ஜிப்சம் கனிம இருப்பு பகுதிகளை கண்டறிய ஆய்வு மேற்கொள்ளப்படும்

சேலம், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் ஜிப்சம் கனிம இருப்பு பகுதிகளை கண்டறிய ஆய்வு மேற்கொள்ளப்படும்.

9. நவீன நில அளவை கருவி கொள்முதல் செய்யப்படும்

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சுரங்கங்கள் மற்றும் குவாரிகளின் குத்தகை உரிம எல்லைகளை நில அளவை செய்திட ரூ.20 இலட்சத்தில் Differential Global Positioning System (DGPS) என்ற நவீன நில அளவை கருவியினை கொள்முதல் செய்து சுரங்கப் பகுதிகள் மற்றும் சுரங்க செயல்பாடுகள் கண்காணிக்கப்படும்.

துரைமுருகன்
நீர்வளத்துறை அமைச்சர்